Friday 24th September

Home | About | முன்னயவை | RSS feed

Home அரசியல் வரலாற்றுப் பதிவுகள்

SEARCH



## மீண்டும் ஒருங்கிணையும் விடுதலைப் புலிகள்- ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர் (பாகம் 22)



ஆதரவாளர்கள் தமது முயற்சியை கைவிடவில்லை. லண்டனிலிருந்து வந்திருந்த ராஜா மற்றும் குலம் ஆகியோர் இணைவுக்கான புதிய திட்டங்களோடு எமது உறுப்பினர்கள் அனைவரையும் சந்திக்கின்றனர். பிரபாகரன் குழுவிலிருந்த உறுப்பினர்களையும் பலதடவை தனித்தனியாகச் சந்திக்கின்றனர். இடைவிடாத இவர்களின் முயற்சியின் பலனாக அனைத்து உறுப்பினர்களும் சந்தித்து உள்ளக வாக்கெடுப்பு ஒன்றை நிகழ்த்த வேண்டும் என்று முடிவாகிறது. பிரபாகரன், நாகராஜா, பேபிசுப்பிரமணியம், நான் உட்பட ஏனைய அனைத்து உறுப்பினர்களையும் அழைத்து வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான திகதியும் குறிக்கப்பட்டுவிட்டது.

ராஜாவின் வீடு ஊர்காவற்துறையை அண்மித்த பகுதியில் பாதுகாப்பான இடத்தில் அமைந்திருந்ததால் அனைத்து உறுப்பினர்களையும் ஒருங்கிணைப்பதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிவுசெய்து கொள்கின்றனர். தீவுப்பகுதியான ஊர்காவற் துறையில் அப்போதெல்லாம் பொலீஸ் இராணுவக் கெடுபிடிகள் பெரிதாக இருந்ததில்லை. ஒன்றுகூடலுக்கான பாதுகாப்பான பிரதேசமாக அமைந்திருந்தது. அன்று அதிகாலையே அனைவரும் மிகுந்த நம்பிக்கையோடு ஊர்காவற்துறையை நோக்கிப் பயணிக்கிறோம். வழி நெடுகிலும் எம்மைப் போன்ற இளைஞர்களைச் சந்திக்கிறோம். எந்தத் துரயமும் இன்றி நண்பர்களோடு உல்லாசமாய் தெருக்களில் கூடித்திரிந்த இளைஞர்களைக் கடந்து செல்கிறோம்.

பிரபாகரன் குழுவில் இருந்தவர்கள் கூட எங்கோ தொலைவில் தெரிந்த நம்பிக்கையோடே அங்கு வந்திருந்தனர்.

அங்கு வந்திருந்த அனைவரும் ஏதோ நோக்கத்திற்காகக் கூடியிருந்த இளைஞர்கள். எங்காவது ஒரு புள்ளியில் மரணித்துக் கூடப் போய்விடலாம் என்று தெரிந்திருந்தும் தாம் சார்ந்த மக்கள் கூட்டத்திற்காகப் போர்குரல் கொடுக்க வந்திருந்தவர்கள்.

நிண்ட நேர விவதங்களைக் கடந்து செல்கிறோம். நமது தேசத்தின் எதிர்காலம் குறித்த விவாதங்கள் அனைவரையும் மீண்டும் ஒரு புள்ளியில் இணைக்கிறது. போராடவென்று முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட நமது முன்னோக்கிய அசைவியக்கம் குறித்த அக்கறை அனைவரிடமும் காணப்பட்டது.

ஒரு சிலரைத் தவிர யாருக்கும் பிரிந்து சென்று தனித்தனிக் குழுவாக இயங்குவதில் விருப்பு இருக்கவில்லை. அனைவரும் ஒன்றிணைந்து ஏதாவது சாதித்துவிட வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

அந்த விவாதங்களில் நடுவே பிரபாகரன் குறித்த விமர்சனங்கள் வந்து செல்கின்றன. ஆக, பன்முகத் தன்மை கொண்ட, ஜனநாயகத்தையும் மத்தியத்துவத்தையும் ஏற்றுக்கொள்கின்ற மத்திய குழு அமையுமானால், நிலவும் பிரச்சனைகளை முடிவிற்குக் கொண்டுவரலாம் என்ற கருத்து பெரும்பான்மையாகிறது.

அப்போதுதான் ஒரு மத்திய குழுவை வாக்கெடுப்பின் அடிப்படையில் தெரிவு செய்யலாம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. வாக்கிடுப்பின் பின்னர் உருவாகும் மத்திய குழு பத்திரிகை வெளியிடுவது குறித்தும் தீர்மானிக்கும் என்ற கருத்தும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

விவாதங்கள் அனைத்தும் முடிவடைந்து மதியத்திற்குச் சற்றுப் பின்னதாக வாக்கெடுப்பு ஒன்று உறுப்பினர்களுக்கு மத்தியில் நடத்தப்படுகிறது. பிரபாகரன் எம்மோடு அங்கு விவாதத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். அவர் தவிர நந்தனும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். இவர்கள் இருவருமே அதற்கான காரணத்தை முன்வைக்கவில்லை. பலரின் வேண்டுகோளையும் அவர்கள் புறக்கணிக்கின்றனர். இறுதியில் அவர்கள் இருவரும் இல்லாமலே வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

பிரபாகரன் குழுவைச் சார்ந்தவர்களும் எம்மைச் சார்ந்தவர்களுமாக 27 போராளிகள் அங்கு கூடியிருந்தனர். இந்த வாக்கெடுப்பு ஒரு இரகசிய வாக்கெடுபாகவே நடைபெறுகிறது. அங்கு வந்திருந்த ஒவ்வொருவரும் தாம் விரும்பியவர்களது பெயர்களை சிறிய காகிதத்தில் எழுதி வாக்களிப்பதாகத் தீர்மானிக்கப்படுகிறது. பத்து வாக்குகளுக்குக் குறைவாகப் பெற்றவர்களை விடுத்து ஏனையோரில் விருப்புக்கொண்ட ஆறு பேரைக் கொண்ட மத்திய குழு ஒன்று உருவாக்குவதாகத் தீர்மானிக்கப்படுகிறது.

தம்பி ,ராகவன்,பண்டிதர்,மனோ,மாத்தையா,அன்ரன்,தனி,ஆசீர், கலாபதி,சங்கர் ,குமரப்பா,காந்தன்,பீரீஸ்,நாகராஜா,குமணன்,சாந்தன், மாதி,நிர்மலன்,சுந்தரம்,நந்தன்,அழகன், நெப்போலியன்,சிவம் ஆகியோரோடு இன்னும் சில தோழர்களும் என்னோடு கலந்துகொண்டிருந்தனர்.

அந்த வாக்கெடுப்பின் போது, சாந்தன் 27 வாக்குகளை உறுப்பினர்கள் மத்தியிலிருந்து பெற்று அனைவரினதும் அபிமானம் பெற்ற போராளியாகிறார்.

சாந்தனுக்கு அடுத்ததாக எனக்கும் அன்டனுக்கும் 26 வாக்குகள் கிடைக்கின்றன. பிரபாகரன் 25 வாக்குகளைப் பெற்றுக்கொள்கிறார். தனி 21 வாக்குகளையும், மனோமாஸ்டர் 19 வாக்குகளையும், ராகவன் 16 வாக்குகளையும் பெற்றுக்கொள்கின்றனர் நாகராஜா, பேபி, குமணன் போன்ற கோடிட்டுக் காட்டக் கூடிய பலர் பத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றுக்கொண்டனர்.

மனோமாஸ்டர் மத்திய குழுவில் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவிக்காத காரணத்தால் அவருக்கு அடுத்ததாக வாக்குகளுக்கு அதிகமாகப் பெற்றுக்கொண்ட ராகவனை மத்திய குழுவில்

The Author

This post was written by இனியொரு.. on Monday, July 26, 2010, 11:01. This author has written 1877 posts on this blog.

Information

Posted in அரசியல், பிரதான பதிவுகள், வரலாற்றுப் பதிவுகள்

This post has 118 Comments. Write your own comment.

Subscription

Subscribe by RSS feed or by e-mail address to receive latest news and updates.

Subscribe by RSS feed

Enter your e-mail... Sign Up

Advertisement







Hot topics

Recent Topics Most Viewed Most Discussed

போர்க்குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் மகிந்த ராஜபக்ச

இலங்கை அரசுக்கு எதிராக கச்சத்தீவு செல்லும் போராட்டம் இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி அல்ல- பாகிஸ்தான்.

www.tamilarangam.net

இணைத்துக் கொள்கிறோம். ஆக, இப்போது பிரபாகரன்,நான், சாந்தன்,அன்டன்,தனி,ராகவன் என்ற ஆறுபேர் கொண்ட மத்திய குழு உருவாகிறது.

இவ்வாறு மத்திய குழு ஒன்று தெரிவு செய்யப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்த பின்னர், பத்திரிகை வெளியிடுவதற்கான முடிவுககளை மேற்கொள்கிறோம்.

பத்திரிகையின் பெயர் தொடர்பான விவாதங்கள் எழுகின்றன. உணர்வு என்பது பிரபாகரன் குழுவினரின் சஞ்சிகையின் பெயராகவும், புதிய பாதை எமதாகவும் இருந்தது. வந்திருந்தவர்களின் எண்ணைக்கையில் இருபகுதியினருமே அரைவாசி அளவில் இருந்ததால், ஒரு முடிவிற்கு வரமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறோம். அவ்வேளையில் அங்கிருந்த குமரப்பா புதிய பாதை என்ற பெயரையே விரும்புவதாகத் தெரிவித்ததால், அப் பெயரையே இறுதியில் சஞ்சிகையின் பெயராக ஏற்றுக்கொள்கிறோம்.



தமிழீழ விடுதலை புலிகள் பிளவடைந்த வேளையில் விரக்தியுற்ற நிலையில் அரசியலிலிருந்து விலகிச் செல்வதாகத் தீர்மானித்த குமரப்பா, நாம் மீண்டும் இணைவதை அறிந்துகொண்டதும் கூட்டத்திற்கு வந்திருந்தார். இவரைத் தவிர செல்லக்கிளி போன்ற சில போராளிகள் எந்தத் தொடர்புமின்றி ஒதுங்கியிருந்தனர்.

மத்திய குழு தெரிவாகிவிட்டது. பத்திரிகைக்கான பெயரும் உருவாக்கப்பட்டுவிட்டது. மீண்டும் எதிர்காலம் குறித்த பேச்சுக்களை ஆரம்பிக்கிறோம். இணைவை ஏற்படுத்திய ராஜாவிற்கும் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுத்தும் நாளாகவும் அது அமைந்திருந்தது. அனைவருடனும் தனித்தனியாகப் பேசுகிறார். இந்த சந்தர்ப்பத்தில் பிரபாகரன் தான் எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பிரிந்து செல்லப்போவதாகவும் கூறுகிறார். அதற்கான காரணங்கள் எதையும் அவர் முன்வைக்கவில்லை எனினும் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறுகிறார். இப்போது அவர் பிரிந்து செல்வதாகக் கூறியதும் யாரும் தடுக்கவில்லை. பேபி சுப்பிரமணியமும் பிரபாகரனுடன் தானும் செல்வதாக எழுந்து செல்கிறார்.

இவ்வேளையில் சுந்தரம் பிரபாகரனை நோக்கி, கைத் துப்பாகியை ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு கோருகிறார். அதற்குப் பிரபாகரன் பதிலளிக்க முன்பதாகவே ஏனைய அனைவரும் துப்பாக்கியை அவர் தனது பாதுகாப்பிற்காக வைத்திருக்கட்டும் என ஒரு மனதாகக் கூறுகின்றனர்.

இணைவு முயற்சியை ஏற்பாடுசெய்த ராஜா கூட பிரபாகரனுட நீண்ட நேரம் உரையாடுகிறார். இணைந்து செயற்படும்படி கூறுகிறார். பிரபாகரன், பேபி சுப்பிரமணியம் ஆகிய இருவர் மட்டுமே பிரிந்து சென்று எதையும் சாதித்துவிட முடியாது என்றும் ஒற்றுமையாகச் செயற்படும்படியும் வலியுறுத்துகிறார். பிரபாகரன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. பேபி சுப்பிரமணியத்தைப் பொறுத்தவரை பிரபாகரன் என்ன முடிவெடுக்கிறாரோ அது தான் அவரது முடிவும். நாங்கள் இணைந்திருந்த காலம் வரை பிரபாகரனுக்கு எதிராக அவர் எந்த சந்தர்ப்பத்திலும் நடந்து கொண்டதில்லை.

புதிதாக உருவான மத்திய குழுவில் பிரபாகரன் சார்ந்த நான்கு பேரும் எமது குழுவைச் சார்ந்த




இரண்டு பேரும் உறுப்பினர்களாக தெரிவாகின்றனர். பிரபாகரன் பிரிந்து செல்வதாகக் கூறியதும் இந்தக் குழு ஐந்து பேராகச் சுருங்கிவிடுகிறது.

எது எவ்வாறாயினும் இரண்டு குழுக்களுக்கும் இடையிலான முரண்பாடு அரசியல் முரண்பாடாகவே அமைந்திருந்தது. எம்மைப் பொறுத்தவரை மக்கள் வேலைகளுடன தேசிய விடுதலை இயக்கத்தை உருவாக்குவதாகவும், தம்பியுடன் சார்ந்தோரைப் பொறுத்தவரை இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் காணப்பட்டது. எமது கருத்துக்களுக்கு உட்பட்டவர்களின் விட்டுக்கொடுப்பும், எதிர்க்கருத்துடையவர்களின் நெகிழ்ச்சியும் இணைவை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையை மட்டுமே தளமாகக் கொண்டிருந்தது. பொதுவான அரசியல் தளம் ஒன்று அங்கு காணப்படவில்லை. அதற்கான முதிர்ச்சியும் எம்மிடம் இருந்திருக்கவில்லை.

இரு புறத்திலுமே இவ்வகையான முரண்பாடுகளை வெறுமனே தனி நபர் முரண்பாடுகளாக மாற்ற முற்பட்டவர்களும் தனி நபர் முரண்பாடாகக் கருதியவர்களும் உண்டு. சுந்தரம். கலாபதி, நந்தன், மனோ போன்றோரின் தனிநபர் சிக்கல்கள் ஆளுமை செலுத்துவனவாகவும் அமைந்திருந்தன என்பதையும் மறுக்க முடியாது.

இச்சம்பவம் நடந்து சில நாட்களில் புதிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக மத்திய குழுக் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. முதல் கூட்டத்திற்கு பிரிந்து செல்வதாகச் சென்ற பிரபாகரன் மறுபடி சமூகம் தருகிறார். பிரபாகரன் வெளியேறுவதாகக் கூறுவிட்டுச் சென்றிருந்தாலும் அவர் மீண்டும் மத்திய குழுவிற்கு வந்ததும் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் அவரை ஏற்றுக்கொள்கிறோம்.

அவர் வந்ததுமே மீண்டும் விவாதங்கள் ஆரம்பமாகின்றன. மக்கள் வேலை பயனற்றது என்றும் இராணுவ நடவடிக்கைகளே அவசியமானது என்றும் உடனடியாக நாம் இராணுவம் ஒன்றைக் கட்டமைக்க வேண்டும் என்றும் பிரபாகரன் வாதம் புரிய ஆரம்பிக்கிறார்.

சாந்தனும் நானும் கடந்த காலத்தின் அந்த வழிமுறை தவறானது என்பதை திரும்பத் திரும்ப அரசியல் காரணங்களோடு முன்வைக்கிறோம். பிரபாகரன் அந்த விடயத்தில் விட்டுக்கொடுப்பதாய் இல்லை. ஒரு பலமான இராணுவமும் அதற்குரிய தலைமையும் மட்டும்தான் அவசியம் என்று வாதிடுகிறார். இராணுவத் தலைமை குறித்த விவாதங்களுக்கு அப்பால் மேலதிகமாக அவர் எங்கும் செல்லவில்லை. எம்மால் அப்போது புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், பிரபாகரனுக்கும் எமக்கும் இடையிலான முரண்பாடென்பது தெளிவான அரசியல் முரண்பாடாகவே அமைந்திருந்தது. ராகவன் இரண்டு பகுதியினருக்கும் இடையில் சமரசத்திற்கு முயற்சிக்கிறார். இந்த இழுபறிகளுக்கு மத்தியில் புதிய பாதையின் ஒரு பிரசுரமும் வெளியிடப்படுகிறது.

**(இன்னும்வரும்..)**

குறிப்பு: மேலதிக ஆவணங்களுடன் அச்சு நூலாக வெளிவரவிருக்கும் இத் தொடர்,இன்னும் சில பதிவுகளின் பின்னர் முடிவுறும். அந்தக் கால வெளிக்குள் கட்டுரையாளர் ஐயரின் நேர்காணல் ஒன்றை வெளியிட ஆலோசித்துள்ளோம். இந்த நேர்காணலின் ஒரு பகுதி அச்சுப்பதிவாகும் நூலின் பின்னிணைப்பிலும் இனியொருவிலும் சில நாட்களில் பதியப்படும். இனியொரு வாசகர்கள், ஆர்வலர்கள், படைப்பாளிகள் இந்த நேர்காணலுக்கான வினாக்களை இங்கே பின்னூட்டமாகப் பதிவிடலாம்.

*தொடரின் முன்னைய பதிவுகள்...*

பாகம் 21 பாகம் 20 பாகம் 19 பாகம் 18 பாகம் 17 பாகம்16 பாகம்15 பாகம்14

அயோத்தி மசூதி இடிப்பு தீர்ப்பு ஒத்திவைப்பு
மாவோயிசத்தின் பங்களிப்பு : சமீர் அமீன்
இந்தியாவின் யோசனைப்படி செயலாற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
வன்னியில் மீள்குடியேறிய மக்களின் அவலம்
மக்கள் வரிப்பணமும் அகதிகளும் மகிந்த குடும்ப ஒன்று கூடலும்
புலிகள் மீது தடையை நீக்கமாட்டோம் : தமிழக அரசு
பிரபாகரன் தியாகி,துரோகி - விம்பங்களுக்கப்பால் : அஜித் discussed 195 times
நிசப்தம் கிழித்த கொலைகள் - ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர் (பாகம் பத்து) discussed 165 times
ரெலோ இயக்கத்தில் இணையும் பிரபாகரன் - ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் (பாகம் 24): ஐயர் discussed 139 times
புலிகளின் தலைவராகும் உமாமகேஸ்வரன் : ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் (பாகம் ஏழு) : ஐயர் discussed 125 times
சக போராளிகளுடனான எனது அனுபவக் குறிப்புகள் - ஈழப்போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர் (பாகம் ஒன்பது) discussed 125 times
புரட்சிக்கான மெய்நிகர் கொமிசார் : சி.சிவசேகரம் discussed 125 times
மீண்டும் ஒருங்கிணையும் விடுதலைப் புலிகள்- ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர் (பாகம் 22) discussed 118 times
இந்தியா பற்றிய நமது உரைகல் என்ன ?: யதீந்திரா discussed 115 times
கொலைகளை உரிமைகோரும் புலிகள்– ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர் (பாகம் பதினொன்று) discussed 108 times
விழுப்புரம் ரயில் பாதை தகர்ப்பு - இந்திய உளவுத்துறையின் திட்டமிட்ட சதி! : அஜித் discussed 101 times

**வித்தைகாட்டும் இந்து சாமியார்**

See all videos

**வகைகள்**

அரசியல்
ஆக்கங்கள்
இன்றைய செய்திகள்
இலக்கியம்/சினிமா
கவிதைகள்
காட்சி
சிறுகதைகள்
துடைப்பானின் குறிப்புகள்..
தேசியம் குறித்து
நூல் விமர்சனம்
பிரதான பதிவுகள்
பெண்கள்தினம்
போராளிகள் டயரி
வரலாற்றுப் பதிவுகள்

**பின்னூட்டங்கள்**

**அடக்குமுறைச் சட்டங்களும் அரசாங்க எருமைகளும்.... : தியாகு. (25)**
mamani: பெயரில் ஒன்றும் கிடையாது ராஜா சந்திரன் கருத்தை...
xxx: எல்லாரும் பாலர் வகுப்புப் பிள்ளைகள் என்று நினைத்துத்...
xxx: a voter மிகச் சிறப்பான ஒரு பொழிப்பு.
கானல்: ////இதுவரை யாரும் செய்யதா உதவியையே மகிந்தா ராஜா...
a voter: இதோ நீங்கள் கேட்ட இரண்டு வசனங்கள்: இந்தியத்...
**இந்தியாவின் யோசனைப்படி**

பாகம்13 பாகம்12 பாகம்11 பாகம்10 பாகம்9
பாகம்8 பாகம்7 பாகம்6 பாகம்5 பாகம்4
பாகம்3 பாகம்2 பாகம்1

## 118 Comments

**Shan Nalliah,Gandhiyist Norway**

Posted on 07/26/2010 at 11:57 am

There was no give & take policy! No respect for democratic decisions!No unity! No respect for valuable Tamil lives! No respect for peoples involvement or peoples political movements! No intl cooperation or sympathy! We shd respect each other!listen to each other! Debate & accept democratic choices/orgns! We shd include all Tamils! Listen to elders/inteligensias etc!

Reply

> **ponniah**
>
> Posted on 07/27/2010 at 5:48 pm
>
> i believe that TULF was on political work at that time. There was no need for political work. They should have worked with TULF without messing all of them. Young men should have formed only army under the order of the TULF without talking about communisim and socialism. These militant group wasted time and mss up evryhing.
>
> Now, we lose our country to Sinhalese with help of our people . What a shame .
>
> Reply

**velavan**

Posted on 07/26/2010 at 4:35 pm

My dear Friend!

You are right but it is too late to remember the past and talk about the past. Now let's see what we can do today and what we have to do for tomorrow. We have already learned the longest and the most disgusting lession from the subject of "DISTRUCTION OF DISUNITY" now we have a new subject called " SUCCESS OF UNITY OF THE LOST GENERATION". So, let's have the " UNDERSTANDING, KNOWLEDGE & UNITY".and we have to tell for each and every one of our friends those who are missing in their life. Every single day things are changing , the polictics, religions, the people, and their way of thinking, and you can see this change in every element. Why ?,even the sand , water , air and you name it anything in this world and there you will find little change.And the change happens every single day but we don't look at it and we don't care about those things. So, we also have to change our way of thinking.There are over 35000 widows in our lands and thos children who have no-one to take care of them, are taken by anti-cultural activitists and changed their way of life and destroyed their original identities. Those who constantly talked about our country in the past thirty years, completely stopped talking about it now because they don't want to do anything for their country. We don't want to talk about them but people know everything and now people are awken and they are really smart.It is very easy to write fabulous comments about the past but the fact is that the people don't need those very sensitive comments about the past incidents. THE PAST WILL NEVER BECOME THE PRESENT BUT THE PRESENT WILL BECOME THE PAST AND TH E FUTURE WILL BECOME THE PRESENT. So let think about the future and write about it to the people and then people know what to do and how to do.

Reply

> **Shan Nalliah,Gandhiyist Norway**
>
> Posted on 07/27/2010 at 7:12 am
>
> YOU ARE RIGHT! NOW WE NEED VERY URGENTLY…. UNITY AMONG PEOPLE & REASONABLE GROUPS UNDER TNA, POLITICAL TACTICS, DIPLOMATIC MOVES,ECONOMIC MANIPULATIONS BY GTF/TGTE, PEOPLES FORUMS IN EACH VILLAGES/TOWNS IN SL/ AS WELL AS EU,AU,NA,ME TO HELP EACH OTHER INCLUDING WIDOW&ORPHANS! EACH EMBASSIES SHD BE CONTACTED BY DIASPORA GET SOME IDEA ABOUT IC SUPPORT! LIKE HNB….EX. JAFFNA NATIONAL BANK CAN HELP TO UNITE TAMIL DIASPORA ECONOMY& SLTAMIL ECONOMY! KEEP FOREX UNDER OUR CONTROLL! LAST AMT OF INSURANCE FEE COULD BE SAVED IF JNB START ALL INSURANCE SCHEME FOR ALL TAMILS IN EU,NA,AU,ME ETC! WE CAN START TALKS WITH KOSOVA,ERITREA,CZECH,SLOVAK,BOSNIA ETC ABOUT THEIR EXP & GET ADVICE! I STARTED WTEF,
> WTTT,WTRF! IT MAY HELP TO SHARE OUR IDEAS!TALK & IMPLEMENT!
> http://worldtamilthinktank.blogspot.com
>
> Reply

**வாதம்**

Posted on 07/26/2010 at 5:11 pm

"நாகராஜா, குமணன், நிர்மலன், சாந்தன், சுந்தரம், மாதி, கண்ணன், நந்தன், சிவம் அழகன், நெபோலியன் போன்ற தோழர்கள் எம்மோடு இருந்தனர். அதேவேளை மறுபக்கத்தில் பிரபாகரன், ராகவன், பண்டிதர், மனோமாஸ்டர், மாத்தையா, அன்ரன்,

செயலாற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (1)
Garammasala: இது எப்பவோ தெரிந்த விடயம் தானே. இப்போது...

புலிகள் மீது தடையை நீக்கமாட்டோம் : தமிழக அரசு (3)
mamani: இல்லாத ஒன்றை இருப்பதாக காட்டுவதற்கா இந்த தடை

எனது இறுதி நாட்கள் – ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள்: ஐயர் (20)
mamani: ஐயரிடம் சில கேள்விகள்: நீங்கள் போராட்டத்தில்...
mamani: புளட்டை பற்றி ஐயரின் பதிவினூடே தெரிந்து கொள்ளும்...
mamani: எங்களை விட சுமதியின் பங்களிப்பு பரவாயில்லைதானே...
THAMILMARAN: விக்கி உங்கள் குற்றச்சாட்டுக்களுக்கான...

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி அல்ல- பாகிஸ்தான். (2)
xxx: தெரியாத விடயங்களைப் பற்றிப் பேசுவதில் தமிழ்மாறனை விட...
THAMILMARAN: இடக்கு மடக்காக பேசுவதில் பாகிஸ்தானை விட...

கர்நாடக இசை தமிழிசையே (பாகம் 1) : T.சௌந்தர் (30)
xxx: வரலாற்று ஆய்வு பற்றித் தன் அறிவின்...

கருத்தோடு கலந்த சொற்களின் சுருக்கம் கவிதை – பகிர்வு 9 : கவிதா(நோர்வே) (67)
THAMILMARAN: சுஜி என அழைப்பதிலான நெருக்கம் மேடம்,சார் என...

### முன்னையவை

September 2010
August 2010
July 2010
June 2010
May 2010
April 2010
March 2010
February 2010
January 2010
December 2009
November 2009
October 2009
September 2009
August 2009
July 2009
June 2009
May 2009
April 2009
March 2009
February 2009
January 2009
December 2008
November 2008
October 2008
September 2008
August 2008
July 2008
June 2008

### Popular Tags

Add new tag அரசியல்

### Archives

September 2010
August 2010
July 2010

தனி, ஆசிர், கலாபதி, சங்கர் போன்றோர் தனியாக இயங்க ஆரம்பித்தனர்."

புதிய பாதையின் தோற்றம் – ஈழப்போராட்டத்தில் எனது பதிவுகள்(பாகம்20) : ஐயர்

"புதிதாக உருவான மத்திய குழுவில் பிரபாகரன் சார்ந்த நான்கு பேரும் எமது குழுவைச் சார்ந்த இரண்டு பேரும் உறுப்பினர்களாக தெரிவாகின்றனர்."

மீண்டும் ஒருங்கிணையும் விடுதலைப் புலிகள்- ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் : ஐயர் (பாகம் 22)

இயக்கத்திலிருந்து பிரிந்தவர்கள் பெரும்பான்மையாயின்,அவர்கள் மீண்டும் சேர்ந்த போது,2 க்கு 4 என எவ்வாறு மத்திய குழு உருவாகும்?

Reply

ரூபன்

Posted on 07/26/2010 at 5:49 pm

முரண்பாடுகளை விளக்க மறுக்கும் 'ஐயரின்' வரலாறு…..

ஐயாவின் 20 ஆவது பதிவில்:

பிரபாகரனால் வெயிடப்பட்ட, 'தாயகத்தில்' வெளியான துண்டுபக்பிரசுரத்தை ஐயாவின் பதிவு ஏற்றுக்கொண்டிருந்தது!

(இதை இவர்கள் மீண்டும் மீண்டும் வாசிக்கவேண்டும்!)

22வது பதிவில்…

"விவாதங்கள் அனைத்தும் முடிவடைந்து மதியத்திற்குச் சற்றுப் பின்னதாக வாக்கெடுப்பு ஒன்று உறுப்பினர்களுக்கு மத்தியில் நடத்தப்படுகிறது. பிரபாகரன் எம்மோடு அங்கு விவாதத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். அவர் தவிர நந்தனும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். இவர்கள் இருவருமே அதற்கான காரணத்தை முன்வைக்கவில்லை. பலரின் வேண்டுகோளையும் அவர்கள் புறக்கணிக்கின்றனர். இறுதியில் அவர்கள் இருவரும் இல்லாமலே வாக்கெடுப்பு நடைபெறுகிறது.-"

குறிப்பு: பிரபாகரன் வாக்கெடுப்பை விரும்பவில்லை!!

மறுபக்கத்தில் 'நந்தனும்' வாக்கெடுப்பை மறுத்ததாக ஐயாவின் பதிவு. (இவற்றை 'ஐயாவால்' இன்றுவரை விளங்க முடியவில்லை!!)

வாக்கெடுப்பின் படி—

சந்தன் , அன்ரன், ஐயருக்குப்பின்…

"எது எவ்வாறாயினும் இரண்டு குழுக்களுக்கும் இடையிலான முரண்பாடு அரசியல் முரண்பாடாகவே அமைந்திருந்தது. எம்மைப் பொறுத்தவரை மக்கள் வேலைகளுடன தேசிய விடுதலை இயக்கத்தை உருவாக்குவதாகவும், தம்பியுடன் சார்ந்தோரைப் பொறுத்தவரை இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் காணப்பட்டது. எமது கருத்துக்களுக்கு உட்பட்டவர்களின் விட்டுக்கொடுப்பும், எதிர்க்கருத்துடையவர்களின் நெகிழ்ச்சியும் இணைவை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையை மட்டுமே தளமாகக் கொண்டிருந்தது. பொதுவான அரசியல் தளம் ஒன்று அங்கு காணப்படவில்லை. அதற்கான முதிர்ச்சியும் எம்மிடம் இருந்திருக்கவில்லை".

இடையில்….

தேசிய விடுதலைப் போராட்டம் எவ்வாறு எமது நாட்டில் நடத்தப்படவேண்டும் என்று இதுவரை (ஐயாவால் தெளிவாகக் கூறப்படவுமில்லை!) இது ஆச்சரியம்!!!

"இச்சம்பவம் நடந்து சில நாட்களில் புதிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக மத்திய குழுக் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. முதல் கூட்டத்திற்கு பிரிந்து செல்வதாகச் சென்ற பிரபாகரன் மறுபடி சமூகம் தருகிறார். பிரபாகரன் வெளியேறுவதாகக் கூறுவிட்டுச் சென்றிருந்தாலும் அவர் மீண்டும் மத்திய குழுவிற்கு வந்ததும் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் அவரை ஏற்றுக்கொள்கிறோம்.
அவர் வந்ததுமே மீண்டும் விவாதங்கள் ஆரம்பமாகின்றன. மக்கள் வேலை பயனற்றது என்றும் இராணுவ நடவடிக்கைகளே அவசியமானது என்றும் உடனடியாக நாம் இராணுவம் ஒன்றைக் கட்டமைக்க வேண்டும் என்றும் பிரபாகரன் வாதம் புரிய ஆரம்பிக்கிறார்."

(மேல் பந்தியை வரலாற்றை விளங்கத் துடிப்பவர்கள் நிதானமாக வாசிக்கவேண்டும்)

இறுதியாக…

"இந்த இழுபறிகளுக்கு மத்தியில் புதிய பாதையின் ஒரு பிரசுரமும் வெளியிடப்படுகிறது."

இதை ஐயா வெளியிடவேண்டும்!!!!!

ஆதாரம்:–

"சாந்தனும் நானும் கடந்த காலத்தின் அந்த வழிமுறை தவறானது என்பதை திரும்பத் திரும்ப அரசியல் காரணங்களோடு முன்வைக்கிறோம். பிரபாகரன் அந்த விடயத்தில் விட்டுக்கொடுப்பதாய் இல்லை. ஒரு பலமான இராணுவமும் அதற்குரிய தலைமையும் மட்டும்தான் அவசியம் என்று வாதிடுகிறார். இராணுவத்

June 2010
May 2010
April 2010
March 2010
February 2010
January 2010
December 2009
November 2009
October 2009

தலைமை குறித்த விவாதங்களுக்கு அப்பால் மேலதிகமாக அவர் எங்கும் செல்லவில்லை. எம்மால் அப்போது புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், பிரபாகரனுக்கும் எமக்கும் இடையிலான முரண்பாடென்பது தெளிவான அரசியல் முரண்பாடாகவே அமைந்திருந்தது. ராகவன் இரண்டு பகுதியினருக்கும் இடையில் சமரசத்திற்கு முயற்சிக்கிறார். இந்த இழுபறிகளுக்கு மத்தியில் புதிய பாதையின் ஒரு பிரசுரமும் வெளியிடப்படுகிறது"

ரூபன்
26 07 2010.

Reply

saravanan

Posted on 07/26/2010 at 8:30 pm

அன்ரன் எனப்படுபவர் யார்? அவர் எந்த ஊரை சேர்ந்தவர்?சுளிபுரத்துக்கு அருகாமையில் உள்ள பண்ணாகமா அவருடைய சொந்த ஊர்? தயவு செய்து பதிலை தரவும் ஐயரே? நன்றி

Reply

bhanu

Posted on 07/26/2010 at 8:45 pm

ஐயா வணக்கம்
பல கோளாறுகளுடன் ஆரம்பித்தாலும் இடையில் மாபெரும் இராணுவ வெற்றிகளையும் திரு பிரபாகரன் தலைமையிலான அமைப்பு கண்டுள்ளது.அரசியல ரீதியாக பெரியளவு சாதிக்கவில்லை என்பது யாவரும் அறிந்த்தே.பின்னர் திரு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஓரளவு சர்வதேச அளவில் தமிழர் பிரச்சனையை எடுத்து சென்றவர்.அவரை பற்றி உங்கள் கருத்து என்ன? நிற்க இன்றைய நிலையில் இனவிடுதலைப்போருக்காக நாம் இழந்தவை மிக மிக அதிகம்.உண்மையை சொல்வதானால் நமக்கு இன்று இராணுவரீதியாகவோ அரசியலரீதியாகவோ படுதோல்வி.நான் நினைக்கிறேன் தெழிவான ஒரு இடதுசாரி சிந்தனையுடன் கூடிய ஒரு அரசியல் அமைப்பே ஈழத்தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும்.காலதாமதம் ஆகலாம்.ஆனால் நகர்வுகள் உறுதியாக இருக்கும்.அந்த அமைப்பிற்கு ,திரு பிரபாகரன் போன்று அதாவது தனது ராணுவ போராட்டத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையும் எவரிடமும் எக்காலத்திலும் விலைபோகத தன்மையும் செயல்வீரமும் உள்ள ஒரு தலைவர் தேவை. ஈழத்தமிழர்களின் எதிர்கால அரசியல் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீங்கள் ஐயர்?

Reply

rathan

Posted on 07/26/2010 at 9:01 pm

அன்ரன் கொக்குவிலை சேர்ந்தவர் யாழ் இந்துக்கல்லூரி,யாழ் பல்கலை கழக பழைய மாணவர்.தற்போது சவுத் ஆபிரிக்காவில் இருகின்றார்.மிக அமைதியான சுபாவமுடயவர்.

Reply

saravanan

Posted on 07/30/2010 at 8:51 am

நன்றி சுழிபுரத்தில் இருந்தும் ஒரு அன்ரன் புலிகள் அமைப்பில் ஆரம்ப உறுப்பினராக இருந்துள்ளார்.அதுதான் கேட்டேன்

Reply

saravanan

Posted on 07/30/2010 at 8:55 am

கே பி என்பவர் நேற்று ஒரு அறிக்கை விட்டிருந்தார் 76 களில் அல்பிரேட் துரையப்பாவை கொலை செய்ததால் பிரபாகரன் புலிகள் அமைப்பில் இருந்து அவ் அமைப்பின் தலைவர்களால் நீக்கப்பட்டார் என்று.

Reply

mamani

Posted on 07/27/2010 at 12:16 am

மொத்தம் 27 போராளிகள் கூடியிருந்தனர் அவர்களில் பிரபா,நந்தன் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை அப்படியாயின் எப்படி சாந்தன் 27 வாக்குகளையும் அன்ரன், ஐயர் 26 வாக்குகளையும் பெற முடிந்தது. சுந்தரம்,காத்தான் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனரா? நீங்கள் குறிப்பிடும் காந்தன், ஜான் ரஃமானா?

Reply

கடவுள்

Posted on 07/27/2010 at 11:41 am

காந்தன் , மட்டக்களப்பை சேர்ந்தவர், ஜான் திருகோணாமலை சேர்ந்தவர்

Reply

**OORAAN**

Posted on 07/29/2010 at 12:28 pm

பின்பு காந்தன் எந்த இயக்கத்தில் இருந்தார். அவரது இயக்கப்பெயர் என்ன?

Reply

**kathiravan**

Posted on 07/29/2010 at 10:06 pm

காந்தன் 90 களின் இறுதிவரை புலிகள் அமைப்பில் வன்னியிலே இருந்தார் , அதன் பின்னர் என்ன ஆனார் எண்டு தெரியவில்லை

Reply

**yo**

Posted on 08/02/2010 at 11:58 am

80
ஆண்டு
காலப்பகுதியில்
மட்டக்களப்பு
அம்பாறை
மாவட்டத்தை
சேர்ந்த
பின்வரும்
நபர்கள்
உறுப்பினர்களாக
இருந்தனர் .
யோகன் ,டானியல்,
சயந்தன்,நவம் ,வடி
யோகன்
–
முள்ளிவாய்க்கள்
வரை
இருந்தார்
காந்தன்
-1998
இறுதி
இருந்துள்ளார்
தற்போது
தெரியாது
டானியல்
-
கனடாவில்
யோகபதி
-
ஜெர்மனி
இந்திரன் .தெரியாது
சயந்தன்
-
தெரியாது
சுதா-
சுவிஸ்
ராஜா-
இறந்துவிட்டார்

**ஊர்மிளா**

Posted on 07/27/2010 at 5:54 am

// இந்த சந்தர்ப்பத்தில் பிரபாகரன் தான் எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பிரிந்து செல்லப்போவதாகவும் கூறுகிறார். அதற்கான காரணங்கள் எதையும் அவர் முன்வைக்கவில்லை// அலவாங்கு ..அண்டைக்கு போட்டிருந்தா உருப்பட்டிருக்கும் தமிழ் இனம்.....

Reply

**Suresh**

Posted on 07/31/2010 at 1:47 am

Yep, He made lot of mistakes. first he shd have identified and killed u first befr he died. Stupid.

Reply

**குமரன்**

Posted on 07/28/2010 at 1:47 am

இழந்த தாயக மீட்பில் 35 வருடகாலம் ஆக்கிரமிப்புக்கெதிராக ஆயுதமேந்தி

போராடி தாயகத்தின் சில பகுதிகளை மீட்டெடுத்து தமிழர்களுக்கான ஒரு நாட்டை உருவாக்கி உலகுக்கு காட்டிய பெருந்தலைவன் தமிழ் தேசியத்தின் தலைவன் பிரபாகரன் அவர்கள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட தமிழர்களின் வரலாற்று மாவீரன் .

Reply

**soba**

Posted on 07/28/2010 at 4:33 am

After 35 years he surrendered for his life. He ignored all the people fighting for this purpose.

Reply

**Ponnambalam**

Posted on 08/05/2010 at 3:44 pm

Sir, he did not surrender.

Reply

**mamani**

Posted on 07/28/2010 at 10:01 am

பிரபாகரன் 35 வருடமாக நடத்தியது சண்டை, போராட்டமல்ல அதனால்தான் அவன் போன பின் சண்டை ஓய்ந்து போனது. போராட்டம் இனிமேல்தான் ஆரம்பிக்க வேண்டும். அங்குள்ள மக்கள் விரும்பினால்.

Reply

**Soorya**

Posted on 07/30/2010 at 8:27 pm

மாமணி,நீங்கள் யார்? ஏதோ பெரிதாக தவகல் தெரிந்தவர்போல் எழுதும் வீரன் யார் நீங்கள்? ஒரு இறந்துபோன மனிதனை அவன், இவன் என்று அழைப்பது யாருக்கு அழகு? இதனால் உங்களின் தரம் எப்படியென்று நீங்களே அளவிட்டுக் காட்டுகிறீர்கள். வதந்திகளை வைத்து தொடர்ந்து காழ்ப்புணர்வில் கருத்தெழுதும் நீங்கள் போதகாக்குறைக்கு மருதமடு முகாமில் உள்ள கைதிகளை சாட்சிக்கு அழைக்கிறீர்கள்.

பிரபாகரனோடு கடைசிமட்டும் சண்டையிட்டு தப்பியவர் ஒருவரும் இல்லையென்பதால் கண்ணால் காணாமல், காதால் மட்டும் கேட்டதை வைத்து உண்மைக்குப் புறம்பாக வதந்திகளைப் பரப்புவது ஆரோகியமானதல்ல.

போராட்டம் தொடங்கும் போது இலங்கையிலுள்ள தமிழரிடம் முதலில் கேட்டுவிட்டுத் தொடங்குங்கள்!

Reply

**mamani**

Posted on 07/31/2010 at 2:36 am

சூர்யாவிற்கு கோபம் வருவதில் நியாயமிருக்கிறது ஏனெனில் இது வரை நீங்கள் கூறியதை அப்படியே கேட்டுவிட்டு

கோயில்மாடு மாதிரி தலையாட்டி விட்டு நீங்கள் கேட் கும் பணத்தை அப்படியே வாரிக்கொடுக்கும் அப்பாவிகளைதான் சந்தித்திருப்பீர்கள் கேள்வி கேட்பவர்களையும் துரோகியென்பீர்கள் இப்பொழுது யார் துரோகி யார் தியாகி என்று தெரியாதநிலை . உங்களால் முடியுமா புலம்பெயர்ந்த தமிழரில் இவர் சிறந்தவர் என்று ஒருவர் பெயயரையாவது குறிப்பிட அல்லது இறுதி யுத்தத்தில் இந்த தளபதிநேர்மையானவர் என்று குறிப்பிட்டு சொல்ல!

Reply

Posted on
**Soorya**
08/01/2010 at 7:48 pm

புலி முத்திரை குத்துவதில் எவ்வளவு வேகம் இருக்கிறதோ அதேபோல்தான் உஙகள் வதந்தி பரப்பும் ஆர்வமும் இருக்கிறது.

சிங்கள மோப்பநாயிகள் உஙளைத் தேடி வந்துவிட்டர்களா?

**mamani**

Posted on 07/31/2010 at 2:48 am

உண்மையை சொல்லுங்கள் சரவணனன் பிரபாகரன் களத்தில் இல்லையென்பது நிதர்சனம் ஆனால் அவர் எந்த வகையில் களத்தில் அன்னியமானார் என்பதுதான் பிரச்சனை. பிரபாகரன் சரணடைந்து இறந்தான் என்று சொல்வதில் எந்த தமிழனும் பெருமையடைய போவதில்லை. மேற்குறிப்பிட்ட பின்னூட்டங்களில் நான் ஏக சொற்களை பிரயோகித்திருப்பது ஆதங்கபட்ட பகுதிகளில்தான் உங்கள் மனதை புண்படுத்தியிருந்தால் மன்னித்து கொள்ளுங்கள். அது வேண்டுமென்று எழுதப்பட்ட ஒன்று அல்ல.

Reply

saravanan

Posted on 08/06/2010 at 8:31 pm

சரி அந்த 300000 புலிகளும் எங்கிருந்து தோன்றினார்கள் வானத்தில் இருந்து குதித்தார்களா? மக்களால் தான் புலிகள் 30 வருடங்கள் சிங்களத்தை எதிர்த்து மாபெரும் வெற்றிகளை குவிக்க முடிந்தது. இறுதியில் நச்சு குண்டுகளையும் கொத்துகுண்டுகளையும் போட்டு தான் புலிகளை அழிக்க முடிந்தது. இனி மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தலைமை ஒன்று இல்லாமல் போராட புறப்பட மாட்டார்கள்.யார் தலைமையில் போராடுவது தேவானந்தா சித்தார்த்தன் தலைமயிலா ,அல்லது மாமணி துரை தலைமயிலா? இவர்கள் எல்லோரும் வாயால் புடுங்குவார்கள்

Reply

mamani

Posted on 08/06/2010 at 10:51 pm

அந்த 30,000 போராளிகளையும் எப்படி வீணாக்கினார்கள் என்பதுதான் கேள்வி . சரவணா போராட்டம்தான் தலைவனை உருவாக்கும். தலைவருக்காக யுத்தம் புரிந்ததுதான் வினை. யுத்த வெற்றிகள் அரசியல் வெற்றிகளாக மாற்ற முடியாத வகையிலேயே புலிகள் மாபெரும் தவறிழைத்தார்கள். அந்த வகையிலேயே இதை போராட்டமில்லை என்று வாதிடுகிறோம். மன்னிக்கவும் சரவணன் உங்களுக்கு அரசியல் பாலர் வகுப்பெடுக்க எனக்கு நேரமில்லை

Reply

mamani

Posted on 08/06/2010 at 10:53 pm

மக்கள் தலைமையில் போராடுவார்கள்.

Reply

saravanan

Posted on 08/09/2010 at 8:44 am

அந்த யுத்த வெற்றிகளை வைத்துதான் பேச்சு வார்த்தை மேசையில் சரிக்கு சமனாக உட்கார்ந்தார்கள்.இல் என்றால் சிங்களம் பேச

வந்திருக்குமா?

Posted on
saravanan
08/09/2010 at 8:47 am

நீர் சொன்ன அதே மக்கள் தான் புலியாகி போராடினார்கள்.சரி நீர் சொன்னது போல இனி மக்கள் போராட்டம் ஆரம்பித்தாலும் நீரும் உம்மை போன்றவர்களும் அதை வைத்து இங்கே வந்து உங்கள் விஷமத்தை பரப்பிக்கொண்டு இருப்பீர்கள்.நீங்களுப் எதுவும் செய்ய மாட்டீர்கள் மற்றவன் செய்வதையும் விட்டு வைக்க மாட்டீர்கள்.அனால் வாயால் மட்டும் எல்லாத்தையும் வெட்டி விழ்த்துவீர்கள்

ஊர்மிளா பிரபா

Posted on 07/29/2010 at 2:11 am

குமரன் குஞ்சு , மக்களை துப்பாக்கி முனைல் பிடித்து வைத்து ..அவர்களின் பிழைகளையும் பிடித்துக்கொண்டு பை தற்கொலைதாரிகள் ஆகி..மிஞ்சின சனத்திடம் கப்பம் வாங்கி ..உரித்து உப்பு திராவிய கொள்ளை கூட்டம் ..அவர்களிடம் இருந்து இலங்கை அரசு மக்களை மீடிருகிறது என்பது தான் உண்மை...விமர்சனம் செய்ய அவன் செய்த ஒரு நன்மை சொல்க..யாரை வாழவைத்தான்..

Reply

saravanan

Posted on 07/30/2010 at 8:44 am

சும்மா இருந்த மக்களை மீட்க போகிறோம் என்று சொல்லி அவர்களை கொன்று அங்கவீனராக்கி சொத்துக்களை அழித்து முகாம்களிலே அடைத்து வைத்திருக்கிறது.இது உமக்கு சிங்களம் "தமிழ் மக்களை மீட்டது" போலவா தெரிகிறது

Reply

**ckumar**

Posted on 07/30/2010 at 11:17 am

தம்பி சரவணா
தமது உயிரை காப்பாற்ற
தமிழ் மக்களை
பணயக்கைதியாக
வைத்திருந்து பலி
கொடுத்துவிட்டு பின்னர்
வெள்ளைக்கொடியுடன்
சிங்கள்
இராணுவத்திடமும்
முன்னாள் புலிகளிடமும்
(கருணாகுழு)
சரணடைந்தது உங்கள்
புலிகள் தானே.

Reply

**ckumar**

Posted on 07/30/2010 at 11:19 am

இன்று பல இராணுவத்தினரையும்
புலம்பெயர்ந்த சில தமிழர்களையும்
பணக்காரர்களாக வாழ வைத்தான்.

Reply

**Virumandi**

Posted on 07/28/2010 at 5:17 pm

சோபாவும் மாமணியும்தான் தலைவர் சரணடைகின்ற போது பக்கத்தில்
இருந்தவர்கள்.

Reply

**Suresh**

Posted on 07/29/2010 at 4:46 pm

They can only think within their capacity. That s y our tamils situation came to here.

Reply

**mamani**

Posted on 07/29/2010 at 10:29 pm

இல்லீங்க விருமாண்டி அவங்க தப்பியோடும்போது
படகோட்டினேன்.

Reply

**saravanan**

Posted on 07/30/2010 at 8:47 am

இவங்களுக்கு எப்படியாவது பிரபாகரன்
சரணடைந்து விட்டான் என்று மக்களை
நம்பவைக்க வேண்டும் என்று வெறியுடன்
அலைகிறார்கள்.மாமணியின் ஒவ்வொரு
கருத்தை பார்த்தாலே உங்களுக்கு
விளங்கும்.கூட இருந்து காட்டி
கொடுத்தவர்களுக்கு தானே உண்மை
தெரியும் .நம்புங்க மக்களே

Reply

**mamani**

Posted on 07/30/2010 at 9:42 am

உண்மையை
சொல்லுங்கள் சரவணனன்
பிரபாகரன் களத்தில்
இல்லையென்பது
நிதர்சனம் ஆனால் அவர்
எந்த வகையில் களத்தில்
அன்னியமானார்
என்பதுதான் பிரச்சனை.
மருதமடு முகாமில்

இருக்கும் அரசியல் கைதிகளின் தகவல் மூலம்தான் பிரபாகரனின் இறுதி முடிவு பற்றி எனது நம்பிக்கை இருக்கிறது இல்லையென்றால் நிருபியுங்கள். உங்களின் முட்டாள் தனமான ஆதரவும் உசுப்பேத்தலும் இன்னும் சில புலம் பெயர் பணக்காரர்களை உருவாக்குமே தவிர உண்மையான போராட்டத்திற்கோ அல்லது முகாம் மக்களை மீட்வோ உதவாது. பிரபாகரன் சரணடைந்து இறந்தான் என்று சொல்வதில் எந்த தமிழனும் பெருமையடைய போவதில்லை.

Reply

**mamani**

Posted on 07/30/2010 at 9:49 am

நாங்க கூட இருந்து காட்டி கொடுந்தவங்கென்னா நீங்க கூட இருந்து தப்பியோடிய பயலுங்களா?

Reply

**chandran.raja**

Posted on 07/30/2010 at 10:28 am

வெள்ளைகொடி காட்ட "அதற்கு ஒரு காட்டிக்கொடுப்பு" என்ற பெயரும் வேறையா?

Reply

**Virumandi**

Posted on 07/30/2010 at 5:10 pm

மாமணி அண்ணா! உங்க பிரச்சன என்னண்ணா!நீங்க தமிழன்றத மறந்துராதீங்கண்ணா.

Reply

**saravanan**

Posted on 08/06/2010 at 8:26 pm

சிங்களம் காப்பற்ற பட வேண்டும்

Reply

**Garammasala**

Posted on 07/30/2010 at 6:56 pm

"புறநானூற்று மறத் தமிழன் புறமுதுகிடான்" என்கிற பேய்க் கதைகளை விட்டுப் போட்டு யதார்த்தமாகப் பிரச்சனைகளைப் பார்ப்போம்.
கடைசிவரை ஏதோ திட்டத்தோடை போராடி இனி முடியாது என்ற நிலையில் சரணடைகிறதிலை பிழை இல்லையே!
சயனைட் திண்டு செத்திருந்தால் இப்ப ஏசுகிறவை மெச்சுவினமோ?
சரணடைஞ்சு உசிரோடை இருந்து என்ன செய்திருந்தாலும் ஆதரிக்கிறவை ஏசுவினமோ?
எவ்வளவு மன உறுதியிருந்தாலும் சடுதியாக நெருங்கி வருகிற

தோல்வியும் உயிராபத்தும் ஒருவருக்கு அதிகம் தெரிவுகளை விட்டு வையாது. சில முடிவுகள் சூழ்நிலையின் நிர்ப்பந்தங்கள் தான்.

பிரபாகரன் அதிமானுடனுமில்லை, அரக்கனுமில்லை.
ஆளைத் தாக்குகிறதையும் துதி பாடுகிறதையும் விட்டு விட்டு என்ன பிழையாகப் போனது எண்டு விசாரிப்போமா?

அரசாங்கம் உசிரோடை விடாமல் ஏன் கொண்டது எண்டு விசாரிப்போமா?

Reply

thamilmaran

Posted on 07/30/2010 at 9:39 pm

பிரபாகரனது நிலையில் நின்றூ யோசித்தால்தான் வலி தெரியும்.சாப்பாடில்லை,நித்திரையில்லை,கூடவே வந்த போராளீகளீல்லை,போரை வெல்வோம் எனும் நம்பிக்கையில்லை இனி எதுவுமே முடியாது எனும்போது சரணடைவதை தவிர வேறூ வழி இருந்திருக்க முடியாது.பிள்ளகளோடும் மனைவியோடும் அவர்கள் நிலமையை எண்ணீப்பாருங்கள்.ஆனால் இதையே புலிகளும் மாற்றூ இயக்கத்தினர்க்கு செய்திருக்கிறார்கள் சொந்த இயக்க்த்துள்ளும் செய்துருக்கிறார்கள் அதற்காக இலங்கை அரசு செய்தது சரியாகி விடாது.

Reply

mamani

Posted on 07/31/2010 at 3:14 am

உங்களைப்போல் 50% மான புலம்பெயர் தமிழர் சிந்தித்தாலே ராஜபக்ஸ குரூப்பை கழுவேற்ற முடியும். இவங்க கூற்றுப்படி சாகாத ஒரு மனிதனை கொன்றதாக எப்படி வழக்கு தொடர முடியும் அதுவும் நீங்க வேற சரணடைந்தா சொல்றீங்க ( நானும்தான்) அதுலேயே நாங்க பலரிடமிருந்து அன்னியராகி விடுகிறோம், இலங்கை அரசிற்கு எதிராக வழக்கு போடப்போகிறோம் என்று ஆதரவு கேட்டு பாருங்கள் பலர் சிங்களவராகி விடுவர்.

Reply

saravanan

Posted on 07/31/2010 at 12:01 pm

சரணடைந்தார் சரணடைந்தார் என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லுகிறீரே உமக்கு எவ்வாறு தெரியும் சரணடைந்தார் என்று.பிணங்களை நிர்வாணமாக்கி படமெடுத்து தங்கள் சாதனையை வெளியிடும் சிங்களம் பிரபாகரன் சரணடைந்ததை வீடியோ எடுத்து வெளியிட்டு தங்கள் வீர தீரத்தை வெளியிட்டிருக்குமே.பிரபாகரன் இறந்தார் என்பதற்கு மேலாக அவரை சரணடைந்தார் என்று சொல்லி நம்பவைப்பதன் மூலம் அவரின் வீரத்தை கொச்சை படுத்துவது தானே உங்கள் நோக்கம் மாமணி

Reply

Posted on
**mamani**
07/31/2010 at 11:24 pm

சரணடைவு வீடியோவை வெளியிட்டு சரணடைந்தவர்களை போட்டு தள்ளிய போர்க்குற்றத்தை ஒப்பு கொள்ள அவ்வளவு மரமண்டையனா ராஜபக்ச?

Posted on
**saravanan**
08/04/2010 at 7:21 pm

நடேசன் புலித்தேவன் போன்றோர் சரணடையும் போதே சுட்டு கொல்லப்பட்டார்கள் என்று சொன்ன இலங்கை அரசு மரமண்டை இல்லையா? கொல்லப்பட்டவர்கள நிர்வாணமாய் போட்டு விளம்பரப்படுத்திய சிங்களம் மரமண்டை இல்லையா? இப்படி ஒரு மாற மண்டை தனத்தை ஏன் செய்யவில்லை

**velavan**

Posted on 07/29/2010 at 4:53 am

Hello Friends

Prabhakaran was Prabhakaran and still Prabhakaran is Prabhakaran and also Prabhakaran will always be the same Prhabhakaran. He lost the war not because he was weak in the war but he was cheated by his own political business guys.Trillions Tamils would been born in the past, millions are being born today and even so many millions will be born tomorrow but who is going to be like Prabhakaran.Prabhakaran was the only LION in the battle field. Why we don't say that we lost the war because we know it was Prabhakaran's war. It was one man army and one man war and to fight agaist that one man there were more seven countries got together and fought to defeat that man. So, it is really great and real history and it is going to be a historical subject for the students in future. But you guys don't like to hear such thins in your life because it seems like a dream and un unblievable stories for some of you. so you are unable digest his leadership, publicity ,courage, name, victories, stories,and all these things. So these things make you to writie some stupid things about such a great leader and you feel some sort of happiness.Other wise you dont need to write like this for this article.There is nothing in this article to write or discuss or for any kind of comments. Meeting and discuss their problems and ideas are very common things in such a situation.,Today, we are living in many countries with some identity. The identity was given to each and every tamils by Prabhakaran. Not only today, even after many hundreds and hundreds of years , our future and future generations will have that identity and by that time, even the children of those who hate Prabhakaran, will treat him as a real divine hero. Not only this Iyer but no one can write the whole story about this war because everyone knows little part of this war. So it will be really absurd if you keep on saying anything against to such great leader bu if you want , let's discuss about the past and try to do things for the future. If we really want to have future for next generation , if we want to some kind of understanding,

knowledge, and unity to be implemented in our community, and if we are really intrested in doing something good for our people, first of all we have to learn to respect the great leader. If you know respect , show your respect to others, then you will have double of the respect. So, please don't write anything against such a great leader.

Reply

**Tamizhmani**

Posted on 07/29/2010 at 1:22 pm

Dear Bro & Sistrs I am someone who has born in 1970 and brought up in tamil nadu. All these years, I used to learn through media only about your struggles. I fully agree with Mr. Velevan. The thing is Bro Prabha has done oneside excellently and the other side he has committed so many mistakes like undemocratic way of functioning and killing those who are opposing his rule. Whatever happened, all over we cannot bring it back. What remain is there that we can cultivate/develop. I hope whatever written about that war is more enough to realise our mistakes and good things. Now, urgent requirement is to develop a united group which immediately undertake or extend the support to those who affected in SL and support them in this crucial period. I/We know there are so many affected peoples in SL in very dilapitated condition which cannot be described here. Why not they may be helped by all our affection and love. Instead of thinking about Transnational Governance for Tamils in world, we can first thing of affected people and rescue them and help them to settle. Step by Step later have a democratic setup and start a new way of things to achieve your rights. The world is moving/changing very fast and we too should realise and accept the reality that Bro Prabha vehementally opposed when Bro Karuna explained to him. This forum may be utilised for better realisation of our past mistakes and plan for a better future accepted by all.
BUT NEVER GIVE UP YOUR HOPE. WORLD HISTORY HAS TAUGHT US SO MANY GOOD AND BAD HISTORY, WE WILL CHOOSE GOOD AND GET BETTER LIFE FOR OUR GENERATION.
Thank you.

Reply

**maaran**

Posted on 07/30/2010 at 3:00 pm

துரையப்பாவை பிரபாகரன் கொலை செய்தபடியால்தான் இந்த 27பேரும் விடுதலைப்புலிகள் அமைப்பில் வந்து இணைந்தார்கள். பிரபாகரனின் ஆயுதபோராட்டம் பிடிக்காதவர்கள் ஏன் அவரிடம் கைத்துப்பாக்கியை கொடுக்கும்படி கேட்டார்கள்.

Reply

**xxx**

Posted on 07/30/2010 at 6:40 pm

ஆயுதப் போராட்டமில்லைப் பிரச்சினை — ஆயுதம், போராட்டம், இயக்கம் எல்லாமே ஒரு ஆளாகப் போகிறது தான் பிரச்சினை. சனநாயகம் விளங்காதவைக்கு இதெல்லாம் விளங்காது.

Reply

**saravanan**

Posted on 07/31/2010 at 12:03 pm

சரி பிரிந்து சென்றவர்கள் மக்கள் புரட்சியை ஏற்படுத்த முடிந்ததா? புளட் இயக்கத்தை பற்றி முன்னாள் அதன் உறுப்பினர் எழுதியதை படியும்

Reply

**Nitharsanan**

Posted on 07/30/2010 at 8:25 pm

ஐயர் அவர்கட்கு,

உங்கள் தொடரை தொடர்ச்சியாக வாசித்து வருகின்றேன்.இயக்க வரலாற்றை எழுதுவதற்கு நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியானது வரவேற்க வேண்டியதே.ஆயுத போராட்டம் ஆரம்பமான போது இயக்க உறுப்பினர்களுக்கு இடையே இருந்த கருத்த வேறுபாடுகள் பின்னர் பல இயக்கங்கள் உருவாகுவதற்கு வழி வகுத்ததோடு, இயக்க தலைவர்கள் மீதான தனி நபர் வளிபாட்டினையும் தோற்றுவித்து சென்றது. ஈழ தமிழ் இளைர்களது ஆயுத போராட்டத்தின் ஆரம்பத்தினையும், அதன் வரலாற்றினையும் எழுதும் வரலாற்று ஆசிரியன் தனிநபர் வளிபாட்டிற்கு அப்பால் பட்டவராக இருக்க வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் எமது அடுத்த சந்ததியினருக்கு போராட்ட வரலாறு குறித்த உண்மையினை கூறி சென்றோம் என்ற திருப்தி வரலாற்று ஆசிரியருக்கு கிடைக்கும்.
நன்மைக்கும் உண்மைக்கும் ஒருவன் அன்புடன் எழுதினால் அது என்றும் நிலைக்கும் என்றான் பாரதிதாசன். ஊருக்கு நல்லது சொல்வேன் எனக்கு உண்மை தெரிந்து சொல்வேன் என்றான் கவிஞரும்,பத்திரிகையாளனுமான சுப்பிரமணியபாரதி.இத்தகைய ஒரு நேர்மையும், உண்மையும் உங்களிடம் இருக்க வேண்டும் , இருக்கும் என நம்புகின்றேன்.
